[23rd August 1961

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: There is already a road from Pennagaram to Nagamarai.

SRIMATHI HEMALATHA DEVI: ஏற்கெனவே இருக்கும்படியான மண் ரோட்டை மெட்டல் ரோடாக போடுவதற்கு என்ன எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் அதற்காக எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது.

SRIMATHI HEMALATHA DEVI: ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்லுவதினாலே இந்த ரோட்டை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அந்த வேலையைச் செய்ய முன் வருவார்களா? அப்படியானால் ஹைவேஸ் டிபார்ட்மெண்டிடம் அந்த வேலையை எடுத்துச் செய்யும்படி உத்தரவு போடுவார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமையில், இந்த வேலையையும் எற்று நடத்த முடியுமா அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாக 'வில்லேஜ் கிராண்டுகள்' மூலம் இதை நடத்த முடியுமா என்று ஹைவேஸ் என்ஜினியரிடம் கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து பதில் கிடைத்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Bridge for Adaipparu

*1358 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of SRI A. VEDARATHNAM): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டித் தாலுகா, தலைக்காடு கிராமத்திற்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள அடைப்பாற்றுக்குப் பாலம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) அப்படியானால், என்ன செலவில் எப்பொழுது கட்டப்படும்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (அ) No, Sir.

(இ) Does not arise.

Industrial Development

*1359 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரஷ்ய நாட்டின் முதல் துணைப் பிரதமருடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிபற்றி சமீபத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரம் என்ன?

23rd August 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : There was no formal agenda for discussion with the Deputy Chairman of the Council of Ministers of U.S.S.R. There was only an exchange of views on the progress made in various development programmes in this State.

SRI S. M. ANNAMALAI : நமது மாநிலத்திலே ஏற்பட வேண்டிய தொழில் அபிவிருத்திக்காக ரஷ்ய நாட்டிலிருந்து உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார்களா? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்மிடத்தில் அவர்கள் வாக்களிக்க முடியாது. மத்திய அரசாங்கத்தோடு விவாதிக்க வேண்டிய விஷயம் இது. இந்தச் சர்க்காரிடத்தில் எந்தவிதமான வாக்களிப்பும் செய்யவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : தமிழ் நாட்டிற்கு ஒரு தொழில் திட்டத்தை தரும்படியாக இந்தப் பேச்சு வார்த்தையில் வேண்டு கோளாவது செய்யப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேண்டுகோள் விட வேண்டுமென்று சொல்வது சரியல்ல. நாங்கள் வேண்டுகோள் விடுகிறதில்லை. நம்முடைய ராஜ்ஜியத்தில் என்ன சக்தி இருக்கிறது என்ன வசதி இருக்கிறது, என்ன பலம் இருக்கிறது என்பதைப் பற்றித்தான் பேசுகிறோம். வந்தவர்களிடமெல்லாம் வேண்டுகோள் விடுவதில்லை.

Industrialization—Madras State

* 1360 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any Committee has been appointed to advise the Government on the industrialization of the State?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The State Industries Development Committee has been constituted for this purpose.

SRI A. A. RASHEED : Sir, may I know the personnel of the Committee and may I also know whether any report has been submitted by it?

THE HON. SRI R. VENKATARAMAN : It has submitted five or six reports so far. They are published in the 'IND-COM' journal of the Industries Department of the Government of Madras. The number of members is about 30 to 31.

SRI R. SRINIVASA IYER : May I know, Sir, what the amount of share capital invested in the private sector during the Second Plan is and may I also know where we stand when compared to other States?